திருவாரூர் வந்த

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் கழகத்தினர் அளித்தனர்!

திருவாரூர், ஜூன் 27-

கழகத்தலைவர் , திராவிடமாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,முன்னாள் அமைச்சரும், கழக விவசாய அணி மாநில தலைவருமான உ.மதிவாணன் அவர்களின் இல்லத் திருமண நிகழ்விற்கு வருகைதந்து மணமக்கள் மதி.கதிரவன் த.மௌனிகா ஆகியோரின் திரு மணத்தை தமது திருக்காரங்களால் சிறப்போடு நடத்தி வைத்தார்.

இந்த திருமண நிகழ்விற்கு கழகப் பொருளாளர் டி .ஆர்.பாலு எம்.பி , கழக முதன்மைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு , கழக துணைப்பொது செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா , ஆர். முத்தரசன் (சிபிஐ),முன்னாள் அமைச்சர்கள் முனைவர் கோவி.செழியன், சிவி.கணேசன் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச. முரசொலி, வை.செல்வ ராஜ் (சிபிஐ) சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா முருகன், துரை.சந்திரசேகரன், கா.மாரிமுத்து (சிபிஐ) மாவட்ட செயலாளர் கௌதமன், மாநில இளைஞரணி துணை செயலாளர் நா.இளையராஜா அந்தியூர் சிவா தஞ்சை முன்னாள் மேயர் சன்.ராமநாதன், ஜெகவீ ரபாண்டியன், எஸ்.கே.வேதரத்தினம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

திருவாரூர் வந்திருந்த கழகதலைவர் , திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டா லின் அவர்களுக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் அவர்களின் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் உ.மதிவாணன், டி. ஆர்.பி.ராஜா,மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ராஜ மாணிக்கம், ப.ஆடல ரசன், அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்திபாஸ்கர்,மு. வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலாம் ஜி.பாலு, ஆடலரசன் ஞானசேகரன், த. செல்வம், த. கணபதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கலிய பெருமாள், டி. செந்தில், கே. எஸ். எஸ். தியாகபாரி, பிரித்விராஜ், கமாலுதீன், ஆர்.முருகேசன், ராஜபூபாலன், காஞ்சித்துரை, செல்வா. ஜெயதேவன், கலைவாணி மோகன்.

ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன் , ஆர்.பாலச்சந்திரன், சேகர கலியபெருமாள், புலிவலம் ஏ. தேவா,கொ.தெட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், பா.பிரபாகரன், வே. மனோகரன், கேப்டன். செல்வராஜ், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, ஐ.வி.குமரேசன், வி.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா. மனோகரன், ப.பிரகாஷ், கே.வி.கே.ஆனந்த் . நகர செயலாளர்கள் வீரா. கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், பா.சிவ நேசன், ஏ. கே.டி.சேரன், எஸ்.வி.பக்கிரிசாமி, வாரை.எஸ்.பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் பா.சிவநேசன், பேரளம் தியாகு, ஆர். ராமராஜ், பூண்டி.கே.கலைவேந்தன் ,நகர்மன்ற தலைவர்கள் மன்னை. த.சோழராஜன், கவிதா பாண்டியன், புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா , மகா லெட்சுமி முருகேசன், ஷர்மிளா, மும்தாஜ் நவாஸ் கான், கலைச்செல்வி , கீதா மற்றும் கழக சார்புஅணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் , பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

த.வெ.க. ஆட்சியில்

# குன்னூர் ‘மல்டி லெவல் பார்க்கிங்’ திட்டம் நிறுத்தம்!

## முன்னாள் அமைச்சர் கா.ராமச்சந்திரன் கண்டனம்!

குன்னூர், ஜூன் 27 –

குன்னூர் சட்டமன்ற தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று 13கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வந்த மல்டி லெவல் பார்க்கிங் 



திட்டத்தை நிறுத்திய த.வெ.க அமைச்சர் ரமேஷுக்கு முன்னாள் குன்னூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் – முன்னாள் அரசு கொறடாவும் முன்னாள் அமைச்சருமான கா.ராமச்சந்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்டம் என்பது உலகப் புகழ்பெற்ற சுற்றுலா ஸ்தலமாகும். குறிப்பாக குன்னூர் சிம்ஸ் பூங்கா, லாம்ஸ் ராக் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களை கண்டு ரசிக்க நீலகிரி மாவட்டத்திற்கு வரக்கூடிய பெரும்பாலான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் நிலையில் குன்னூர் நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் சொந்த வாகனங்களில் வரும் போது அவர்களுக்கு பார்க்கிங் வசதி செய்து தர கடந்த தி.மு.க. ஆட்சியில் இந்து அறநிலைய துறை கட்டுப்பாட்டில் உள்ள விநாயகர் கோயிலுக்கு சொந்தமான வளாகத்தில் நீண்ட காலமாக இருந்த திரையரங்கு மழை வெள்ளத்தில் இடிந்து சேதமானது.

இதை அப்புறப்படுத்தி அப்பகுதியில் குன்னூர் மக்களும் சுற்றுலாப் பயணிகளும் பயன் பெறும் வகையில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன மல்டி லெவல் பார்க்கிங் அமைத்திட முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பெயரில் அப்போதைய இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கோவையில் உள்ள மருதமலை கோவிலில் இருந்து 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டது.

இதன் மூலம் மல்டி லெவல் பார்க்கிங் அமைத்திட பணிகள் துவங்கப்பட்ட நிலையில் தற்போதைய த.வெ.க அரசின் இந்து அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பணிகளை நிறுத்திட உத்தரவிட்டிருப்பது குன்னூர் பகுதி மக்களை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. மல்டி லெவல் பார்க்கிங் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அதிலிருந்து வரும் வருமானம் குன்னூரில் உள்ள விநாயகர் நிர்வாகத்திற்கு தான் செல்லும் என்ற உண்மை நிலையை அறியாமல் ரத்து செய்துள்ளதற்கு முன்னாள் அமைச்சர் மற்றும் முன்னாள் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் குன்னூர் பேருந்து நிலையத்தை இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு விரிவாக்க பணி, பழமை வாய்ந்த மார்க்கெட் கட்டிட நிதி ஒதுக்கப்பட்டு, குன்னூரில் உள்ள தோட்ட தொழிலாளர்கள் ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் புதிதாக அரசு கலைக்கல்லூரி, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச ஹாக்கி (HOCKEY)மைதானம் அமைக்கும் பணி ,இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தர குன்னூரில் புதிய தொழில்நுட்ப பூங்கா அமைக்க நடவடிக்கை என எண்ணற்ற திட்டங்கள் குன்னூருக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் த.வெ.க அரசு திட்டங்களை முடக்கும் நோக்கில் செயல்படுவது வருத்தமளிப்பதாகவும், உடனடியாக நிறுத்தப்பட்ட மல்டி லெவல் பார்க்கிங் திட்டத்தை மீண்டும் துவக்க வேண்டுமென திமுக முன்னாள் அமைச்சரும், திமுக தேர்தல் பணிக்குழு செயலாளருமான கா. ராமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

திருவள்ளூர் நகர்மன்றக் கூட்டத்தில் த.வெ.க.வினர் அராஜகம்!

# எம்.எல்.ஏ.க்கள் அத்துமீறி நுழைவு - பெண் கவுன்சிலர்களை தள்ளிவிட்டு அடாவடி!

## 2 மணி நேரம் முடங்கிய நகர்மன்றக் கூட்டம் – திருவள்ளூரில் பரபரப்பு!



திருவள்ளூர், ஜூன் 27-

உள்ளாட்சி அமைப்புகளின் சுயாட்சியையும், ஜனநாயக மரபுகளையும் மதிக்காமல் அதிகார பலத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாக திருவள்ளூர் நகர்மன்றக் கூட்டம் நேற்று மாறியதாக கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. மக்களின் பிரச்சினைகளை தீர்க்க நடத்தப்பட்ட நகர்மன்றக் கூட்டம், த.வெ.க. அரசின் அரசியல் ஆதிக்க அரங்கேற்ற மாக மாறியதால் பொதுமக்களிடையே அதிருப்தி வெடித்துள்ளது.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமையில் நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. நகரின் குடிநீர் தட்டுப்பாடு, சாலைப் பழுதுகள், மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு பராமரிப்பு உள்ளிட்ட மக்கள் நலப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டிய முக்கியக் கூட்டமாக இது இருந்தது.

ஆனால் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே த.வெ.க. தெற்கு மாவட்ட செயலாளர் ஆர்.பிரகாசம் (எ) குட்டி, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் டி.அருண்குமார் உள்ளிட்டோர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் நகராட்சி அலுவலக வளாகத்தை முற்றுகையிட்டனர். பின்னர் முதலமைச்சர் விஜயின் புகைப்படத்தை கையில் ஏந்தியபடி நகர்மன்றக் கூடத்திற்குள் நுழைந்து கூட்ட நடவடிக்கைகளை முடக்க முயன்றனர்

நகர்மன்றத்தில் எந்த புகைப்படத்தையும் வைப்பதற்கு மன்றத் தீர்மானமும், அரசாணை நடைமுறைகளும் அவசியம் என்று நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விளக்கம் அளித்த போதிலும், அதை ஏற்க மறுத்த த.வெ.க.வினர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நகர்மன்றத் தலைவர் அமரும் இடத்தின் முன்பாக அமர்ந்து கூட்டம் நடைபெறாமல் தடுத்ததால், இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கூட்டம் முடங்கியதாக கூறப்படுகிறது.

**பெண் மக்கள் பிரதிநிதி தள்ளிவிட்டதால் பரபரப்பு**

இந்த பரபரப்பின் உச்சக்கட்டமாக, தி.மு.க. பெண் கவுன்சிலர் வசந்தி வேலாயுதம் நகர்மன்றக் கூடத்திற்குள் செல்ல முயன்றபோது, த.வெ.க. நிர்வாகிகள் அவரை தள்ளிவிட்டனர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கீழே விழுந்த அவரை சக கவுன்சிலர்கள் எழுப்பி இருக்கையில் அமர வைத்தனர்.

ஒரு பெண் மக்கள் பிரதிநிதியே பாதுகாப்பாக நகர்மன்றக் கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது, த.வெ.க. ஆட்சியில் ஜனநாயக அமைப்புகளின் நிலை என்ன என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பெண்களின் கண்ணியத்தையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உரிமைகளையும் மதிக்காத அரசியல் கலாச்சாரம் வளர்க்கப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

**கதவை உடைத்து நுழைய முயற்சி**

நகர்மன்றக் கூடத்திற்குள் மேலும் பலர் நுழைய முயன்றபோது காவல்துறையினர் தலையிட்டனர். அத்துமீறி நுழைய முயன்றவர்களை தடுத்து நிறுத்திய போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது காவல்துறையினரின் எச்சரிக்கையையும் மீறி ஆளுங்கட்சியில் உள்ள காவல்துறையை ஒழுக என முழக்கங்கள் எழுப்பப்பட்டதால் நகராட்சி அலுவலக வளாகம் போராட்டக் களமாக மாறியது.

**மக்கள் பிரச்சினைகள் ஓரங்கட்டப்பட்டன!**

குடிநீர் இல்லை, சாலைகள் சேதமடைந்துள்ளன, வடிகால் வசதிகள் குறைபாடாக உள்ளன, தெருவிளக்குகள் பராமரிப்பின்றி கிடக்கின்றன என்று மக்கள் அவதிப்பட்டு வரும் நிலையில், அவற்றைப் பற்றி விவாதிக்க வேண்டிய நகர்மன்றக் கூட்டம் அரசியல் பலப்பரீட்சைக்கான மேடையாக மாற்றப்பட்டிருப்பது வேதனையளிப்பதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் உள்ளாட்சி அமைப்புகளை அரசியல் அதிகாரக் காட்சிக்கான அரங்கமாக மாற்றும் இந்த அணுகுமுறை தொடர்ந்தால், ஜனநாயக அமைப்புகளின் மாண்பு எங்கே நிலைநிறுத்தப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

**ஜனநாயகத்தை மிரட்டலால் நடத்த முடியுமா?**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களை அழைத்து வந்து முடக்குவது ஜனநாயகமா? சட்ட நடைமுறைகளை புறக்கணித்து அரசியல் அழுத்தம் செலுத்துவது புதிய ஆட்சி முறையா? என்ற கேள்விகள் திரு வள்ளூர் முழுவதும் பேசுபொருளாகியுள்ளன.

நகர்மன்றத் தலைவர் உதயமலர் பொன் பாண்டியன், நகர்மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும், பெண் கவுன்சிலர் தள்ளிவிட்டு விவகாரம் தொடர்பாகவும் காவல்துறையில் புகார் அளித்து உரிய நடவடிக்கை கோரப்படும் என்று தெரிவித்தார்.

உள்ளாட்சி அமைப்புகளின் சுயாட்சியை மதிக்காமல், அதிகார பலத்தால் ஜனநாயகத்தை அச்சுறுத்தும் போக்கு தொடர்ந்தால் அது மக்கள் ஆட்சிக்கே ஆபத்தாக மாறும் என்பதே திருவள்ளூரில் எழுந்துள்ள முக்கியக் கவலையாகும்.

அந்தியூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்

# பி.ஜி.ராமதாஸ் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன். 27-

ஈரோடு வடக்கு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர்வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பி.ஜி.ராமதாஸ் நேற்று முன்தினம் (25.6.2026-வியாழக்கிழமை) இரவு 11 மணியளவில் உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்ததும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

“கல்வி நிலையத்திலும் த.வெ.க. ஆணவ அரசியல்”

# கட்டணம் கேட்ட பள்ளி நிர்வாகத்திடம் ரகளை செய்ததாக நிர்வாகி மீது புகார்!

## பள்ளி வாசலில் காரை குறுக்கே நிறுத்தி அராஜகம் – பொதுமக்கள் அச்சம்!

திருவள்ளூர், ஜூன் 27-

திருவள்ளூர் அருகே காஞ்சிபாடி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் கல்விக் கட்டண விவகாரத்தை முன்னிட்டு த.வெ.க. நிர்வாகி ஒருவர் அராஜகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளியில் பயிலும் தனது உறவினர் மாணவரின் கல்விக் கட்டணமாக சுமார் ரூ.13 ஆயிரம் நிலுவையில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், மாணவருக்கு மாற்றுச் சான்றிதழ் (டி.சி.) வழங்க வேண்டும் என வலியுறுத்தி த.வெ.க. நிர்வாகி யான ராஜேஷ் என்பவர் பள்ளிக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்போது, கல்விக் கட்டணத் தொகையை செலுத்த முடியாது என்றும், உடனடியாக மாற்றுச் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் பள்ளி நிர்வாகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பள்ளி வளாகம் மற்றும் அதன் நுழைவாயில் பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியதாகவும், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களிடம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் புகார் எழுந்துள்ளது.

இதுமட்டுமின்றி, பள்ளி வாசலின் முன்பாக தனது காரை குறுக்கே நிறுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிரமப்படும் படி செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் பள்ளிக்கு வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் அவதிக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வி நிலையங்கள் என்பது மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் புனிதமான இடங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பள்ளி நிர்வாகங்களை மிரட்டும் போக்கு அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். கல்வி நிறுவனங்களுக்குள்ளேயே இத்தகைய அழுத்த அரசியல் நடைபெறுவதாக எழும் குற்றச்சாட்டு கள் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் த.வெ.க. நிர்வாகிகள் தொடர்பான சர்ச்சைகள், மிரட்டல் புகார்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதால் பொதுமக்களிடையே அச்ச உணர்வு அதிகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்

ஜூன் 27 (2020)



தனது இளமைப் பருவத்திலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கி 1961ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாவட்ட தி.மா.மு.க. மாநாட்டுப் பொருளாளராகவும், 1965ல் நெல்லை மாவட்டம், அய்யாபுரம் கிளைச் செயலாளராகவும், தலைமை இலக்கிய அணித் தலைவராகவும், கழக வெளியீட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கவித்திறன், உரைநடை வீச்சு, சிறுகதைச் சிறப்பு, நாடக ஊடகம், இலக்கிய ஆய்வு, அரங்கங்களை ஆட்கொள்ளும் சொற்பொழிவு அத்துணையிலும் முத்திரை பதித்த இவர், பாவேந்தர் பாரதிதாசன் திருக்கரத்தால் ‘பகுத்தறிவுப் பாவலர்’ எனும் பட்டம் பெற்றவர்.

“கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத் திறன், கவித்திறன் முதலிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும் '' என்று பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2005ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பாவேந்தர் விருதினை’ வழங்கி சிறப்பித்தார்.

7வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், தமிழக அரசின் சார்பில் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ நூற்றாண்டு பாவேந்தர் விருது கலைஞர் கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமாரபாளையம் ஜெ.கே.கே.சுந்தரம்

ஜூன் 27 (2005)



சிறு வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இலங்கையில் வசித்தபோது கொழும்புவில் கிளைக் கழகச் செயலாளராகவும், தாயகம் திரும்பிய பின் 1970ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் 2004ல் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

“நான் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும், தன் காரிலேதான் நான் பயணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.